மெட்ராஸ் உயர்நீதிமன்றம் அதிகாரவரம்பு

முன்னிலை

மாண்புமிகு நீதியரசர் திரு.எஸ்.எம்.சுப்பிரமணியம்

நாள் 11-01-2023

இ.உ.ப.ம.1210 of 2022

மற்றும்

உ.ப.ம.No.20779 of 2022

தனலட்சுமி ..... மனுதாரர்

எதிர்

வினோத் ..... எதிர்மனுதாரர்

வேண்டுரை: மனுதாரரால் உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 24ன் கீழ் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டு, இ.தி.அ.ம. எண்.243/2022 வழக்கை மயிலாடுதுறை முதன்மை சார்பு நீதிமன்றத்தின் கோப்புகளிலிருந்து திரும்பப்பெற்று அதை மாறுதல் செய்து கடலூர் குடும்ப நீதிமன்றத்தின் கோப்புகளில் ஏற்பதற்காக தாக்கல் செய்யப்பட்டது.

மனுதாரருக்காக - திரு.A.K.வேலன்.

எதிர்மனுதாரருக்காக - திரு.S.ஜெயசீலன்.

<u>உத்தரவு</u>

தற்போதைய உரிமையியல் பல்வவை மனு இ.தி.அ.ம. எண்.243/2022 வழக்கை மயிலாடுதுறை முதன்மை சார்பு நீதிமன்றத்தின் கோப்புகளிலிருந்து திரும்பப்பெற்று அதை மாறுதல் செய்து கடலூர் குடும்ப நல நீதிமன்றத்தின் கோப்பிற்கு மாறுதல் செய்வதற்காக தாக்கல் செய்யப்பட்டது.

2. மனுதாரர் - மனைவி மற்றும் எதிர்மனுதாரர் - கணவர் இருவருக்கிடையேயான திருமணம் இந்து சாஸ்திர சம்பிரதாயங்களின் படி 28/03/2019 அன்று நடைபெற்றது. மனுதாரருக்கு இந்த திருணத்தின் காரணமாக ஒரு ஆண் குழந்தை பிறந்தது. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்களுக்கிடையில் ஏற்பட்ட மன வேறுபாடுகளின் காரணமாக, தற்போது அவர்கள் தனித்தனியாக வாழந்து வருகின்றனர்; குழந்தை மனுதாரர் - மனைவியிடம் உள்ளது.

3. எதிர்மனுதாரர் கணவர் - இ.தி.அ.ம. எண்.243/2022யை விவாகரத்திற்காக மயிலாடுதுறை முதன்மை சார்பு நீதிமன்றத்தின் கோப்புகளில் தாக்கல் செய்தார்.

4. மனுதாரருக்கான கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில், மனுதாரருக்கு பணி ஏதுமில்லையென்றும், அவர் தற்போது அவருடைய ஆண் குழந்தையுடன் கடலூரில் அவருடைய பெற்றோருடன் வசித்து வருகிறார் என்றும், மயிலாடுதுறை முதன்மை சார்பு நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளதும் விவாகரத்திற்காக எதிர்மனுதாரர் - கணவரால் தாக்கல்

செய்யப்பட்ட இ.தி.அ.ம. எண்.243/2022யை மனுதாரர் கடலூரிலிருந்து மயிலாடுதுறை வரை பயணித்து வழக்கை நடத்தும் வகையில் மனுதாரர் இல்லை என்று கூறினார்.

5. மனுதாரருக்கான கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில், எதிர்மனுதாரர் அவருடைய சொந்த குழந்தையின் பராமறிப்பிற்காகக் கூட இடைக்கால பராமறிப்பு செலவுதனை கொடுப்பதில்லை என்றும், தற்போது மனுதாரர் அவருடைய குழந்தைக்கு உணவளிக்கக் கூட அவருடைய வயது முதிர்ந்த பெற்றோரை சார்ந்துள்ளார் என்றும் கூறினார். இதுபோன்ற சூழ்நிலையில் நீதிமன்றம் இதில் தலையிட்டு இளங்குழந்தையின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அது ஒரு அடிப்படை உரிமையாக இந்திய அரசியலமைப்புச் சட்டத்தால் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

6. எங்கெல்லாம் இளங்குழந்தையின் வாழ்க்கை கேள்விக்குள்ளாகிறதோ, நீதிமன்றங்கள் தலையிட்டு குழந்தையின் அக்கறையைப் பாதுகாக்க எதிர்பார்க்கப்படுகின்றது மற்றும் இதில் எந்தவிதமான பாதுகாப்பின்மையையும், மிக அதிக சமூதாய எதிர் விளைவுகளை ஏற்படுத்தும் என்பதால் இந்த உயர்நீதிமன்றம், அரசியலமைப்புச் சட்டம் பாதுகாப்பு நீதிமன்றம் என்ற வகையில், இதுபோன்ற சூழ்நிலைகளில், எந்த நபராலும் சம்பிரதாயப்படியான மனுதாக்கல் செய்யப்படாத நிலையிலும், இடைக்கால பராமரிப்புத் தொகை வழங்க எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு சமயம் உயர்நீதிமன்றம் இடைக்கால பராமரிப்பை வழங்க தவறினால், அதே சமயம் இளங்குழந்தையை பணியில்லாத ஒரு தாய் பராமரிக்க நேர்ந்தால் அச்சமயம் உயர்நீதிமன்றம் இளங்குழந்தையை பாதுகாக்க வேண்டிய இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் விதிமுறைகளிலிருந்து தவறியதாக கருதப்படும்.

7. எதிர்மனுதாரர் தரப்பிலான கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில், மனுதாரர் தரப்பில்

எழுப்பிய வாதத்தை மறுத்து, எதிர்மனுதாரர் முன்பு அபிதாபியில் வேலை பார்த்து வந்தார் என்றும் மற்றும் கோவிட் 19 தொற்று சூழ்நிலைக்குப் பிறகு அவர் தன் வேலையை இழந்து தற்போது அவர் மயிலாடுதுறையில் அவர் பெற்றோருடன் வாழ்ந்து வருகிறார் என்றும் கூறினார்.

8. எதிர்மானுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் இந்த நீதிமன்றம் கேட்டுக்கொண்டதின் படி எதிர்மனுதாராரிடமிருந்த இளம் குழந்தைக்கு இடைக்கால பராமரிப்பு வழங்க அறிவுரை கேட்டு கூறும்படி கேட்டுக்கொண்டது. அறிவுரைப்படி எதிர்மனுதாரருக்கான கற்றறிந்த வழக்கறிஞர் சமர்பித்துக்கொண்டபடி எதிர்மனுதாரர் தயாராகவும், விருப்பத்துடனும் குழந்தைக்கு இடைக்கால பராமரிப்புத் தொகை ரூ.3,000/- வழங்குவதாக கூறினார்். எதிர்காலத்தில் வேலை கிடைத்தவுடன் எதிர்மனுதாரர் மேலும் குழந்தைக்கு அதிக பராமரிப்புத் தொகை வழங்க ஒப்புக்கொள்கிறார் என்றும், இது சம்பந்தமாக மனுதாரர் சுதந்திரமாக தக்க நீதிமன்றத்தில் தேவைப்படும் விண்ணப்பத்தை குடும்பத்தகுதி மற்றும் பணியின் தன்மை அடிப்படையில் தாக்கல் செய்யலாம் என்றும் கூறினார்.

9. இளங்குழந்தையை பராமரிக்க வேண்டிய கடமை பெற்றோரைச் சாரும். ஆண் குழந்தையை தகப்பனார் தான் கவனித்து வளர்க்க வேண்டும். ஏனெனில் அவர் தான் இயற்கையான பாதுகாவலர் மற்றும் சம்பாதிக்கும் உறுப்பினர். மனுதாரர் - மனைவி வேலை இல்லாதவர் ஆகையால் எதிர்மனுதாரர் - கணவர் தான் குழந்தையை பராமரிக்க வேண்டும்.

10. இளங்குழந்தைக்கு இடைக்கால பராமரிப்புத்தொகை வழங்க எந்த விண்ணப்பமும் தேவையில்லை. எந்த விண்ணப்பமும் இல்லத நிலையில் இளங்குழந்தைகள் மீது அக்கறைப்பட்டு நீதிமன்றங்கள் இடைக்கால பராமரிப்புத் தொகை வழங்க

கடமைப்பட்டவைகளாகும். அதன்படி இளங்குழந்தையின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்பட வேண்டும்; இது அரசியலமைப்புச் சட்டம் கட்டுரை 21ன் கீழ் அடிப்படை உரிமையாகும்.

11. பராமரிப்பிற்கான பரிகாரம் சமூக நீதியின் ஒரு அங்கம். இது அரசியலமைப்புச் சட்டத்தில் மனைவியையும், குழந்தையையும் அனாதையாக விட்டு அலைக்கழிப்பதற்கு எதிரான மூல எதிர்பார்ப்பாகும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முன்னுரை மற்றும் கட்டுரை மற்றும் 15(3) பெண்கள் மற்றும் குழந்தைகளின் உரிமைக்காக நேர்மறையான செல்யபாடு மற்றும் சமூக நீதியை உறுதியளிக்கின்றது.

12. இடைக்கால பராமரிப்பிற்கான உத்தரவு ஒரு நிபந்தனைக்கு உட்பட்டது, சூழ்நிலைப்படி மனைவி அல்லது கணவர் யார் கோரிக்கை வைக்கின்றாரோ அவருக்கு சுந்திரமான வருமானம் அவருக்கு உதவ அவன், அல்லது அவளுக்கு போதுமானதாக இல்லாதிருத்தல் வேண்டும். மனைவி படித்தவள் அவர் அவரை பார்த்துக்கொள்ள வேண்டும் என்பது பராமரிப்புக் கோரிக்கைக்கு விடை ஆகாது. நீதிமன்றம் நபர்களின் தகுதிகளை பரிசிலித்து அதன்படி கணவரின் நிலைப்படி, தகுதிப்படி மனைவிக்கு வழங்க வேண்டுமா அல்லது அவர் உதவி தேவையா என முடிவு செய்ய வேண்டும். பராமரிப்பு என்பது உண்மை நிலையைச் சார்ந்தது. நீதிமன்றம் அதன் முன் வைக்கப்பட்ட பல்வேறு பொருண்மைகளை ஆராய்ந்து கோரிக்கைக்கு உருக்கொடுக்க வேண்டும். நீதிமன்றங்கள் முடிவுப்படி, ஒரு சமயம் மனைவி சம்பாதித்தால் அது கணவரால் பராமாரிப்பு வழங்குவதை தடை செய்ய முடியாது. மனைவியை விட கணவர் பராமரிப்பு வழங்க வேண்டிய சட்டப்படியான கடமை உயர்ந்த இடத்தில் அமைகின்றது.

13. இளங்குழந்தைக்கான பராமரிப்பை பொறுத்து குழந்தையின் வாழ்தல் செலவு என்பது

உணவுக்கான செலவுகள், ஆடைகள், வசிப்பிடம், மருத்துவச் செலவுகள், குழந்தையின் கல்விச் செலவையும் உள்ளடக்கும். குழந்தையின் கல்விச் செலவு சாதாரணமாக தகப்பனார்ர் ஏற்றுக்கொள்ளப்படுவதாகும். ஒருசமயம் மனைவி பணியாற்றி போதிய அளவு சம்பாதித்தால் அந்த செலவை விகிதாச்சாரப்படி நபர்களால் பங்கிட்டுக்கொள்ளலாம். கணவர் அல்லது மனைவியின் உண்மையான ஊனம் அல்லது உடல்நலக்குறைவு அல்லது யாருக்கு தொடர்ந்து கவனம் தேவையோ மற்றும் தொடர்ந்த செலவுகள் ஆகியவை பராமரிப்பின் அளவை நிர்ணயம் செய்ய சம்பந்தப்பட்ட காரணிகள் ஆகும்.

14. பல்வேறு செலவுகளிலிருந்து அழுத்தம் காரணமாக விவாக சம்பந்தமாக வழக்குகளுடைய நபர்கள் சம்பிரதாயப்படியான விண்ணப்பத்தைக் கூட, பராமரிப்பு வழங்க / இடைக்கால பராமரிப்பு வழங்க, இளங்குழந்தைகள்/குழந்தைகளுக்காக தாக்கல் செய்ய முன் வருவதில்லை. அதுபோன்ற சூழ்நிலையில் அவை நீதிமன்றங்களின் கடமைப்படி விவாக சம்பந்தமான வழக்கு கணவன் மனைவிக்கிடையில் நிலுவையிலுள்ள போது இளங்குழந்தை/குழந்தைகள் பராமரிப்பு வழங்கப்பட்டு அவர்களை பாதுகாக்கவும் அவர்கள் அக்கறை மீது உறுதி கொள்ளவும் நீதிமன்றம் கடமைப்பட்டது.

15. கேள்விக்குறிய குழந்தையின் வாழ்வாதாரம் வாழ்வு முறை அல்லது கல்வி சம்பந்தமாக நீதிமன்றம் இளங்குழந்தை/இளங்குழந்தைகளின் பாதுகாவலராக செயல்பட்டு இளங்குழந்தையின் அக்கறைக்கு பாதுகாப்பளித்து இடைக்கால பராமரிப்பு வழங்க கட்டளையிட வேண்டும். எந்த நிகழ்விலும் வேலையற்ற தாய்மார்கள் அவர்களுடைய இளங்குழந்தை/இளங்குழந்தைகளை பராமரிக்கும் சந்தர்ப்பத்தில், வயதானவர்களுக்கு சுமையை ஏற்படுத்தும் விதம் மற்றும் அதுபோன்ற சூழ்நிலைகளில் அவைகளை நீதிமன்றங்கள் வன்மையாக பரிசீலிக்க வேண்டும். முன்தலைமுறை பெற்றோர்கள்

அவர்களுடைய இளங்குழந்தைகளால் சுமை ஏற்படுத்தும் போது அதுபோன்ற இளங்குழந்தைகளின் தகப்பனார் சம்பாதிக்கும் உறுப்பினர்களாக இருந்து அவர்கள் கடமை என்றதிலிருந்து தப்பியோடும் விதத்தில், அவற்றை நீதிமன்றம் சகித்துக்கொள்ளக்கூடாது. தகப்பனாரின் பொறுப்பு இயற்கையில் முதலாவது மற்றும் தகப்பனார் தான் அவருடைய இளங்குழந்தை/இளங்குழந்தைகள் பராமரிக்கும் கடமைக்குட்பட்டவர். கணவர் மனைவிக்கிடையில் ஒரு விவாக சம்பந்தமான வழக்கு நிகழும் போதாகும், பார்க்கும் உரிமை மறுக்கப்படுதல், பராமரிப்புத் தொகை வழங்குவதற்கு ஒரு விதிவிலக்காக எடுத்துக்கொள்ளும் காரணமாகாது. பார்க்கும் உரிமை வேறுபல பொருண்மைகளையும் சூழ்நிலைகளையும் அடிப்படையாகக் கொண்டு முடிவு செய்யப்படுவது. அதை இளங்குழந்தை/குழந்தைகளின் பராமரிப்பு வழக்குகளில் சம்பந்தப்படுத்தக்கூடாது.

16. தற்போதைய வழக்கில் வழக்கு மாறுதல் செய்வது குறித்து பரிசீலிக்கப்பட வேண்டும், காரணம் மனுதாரர் வேலை இல்லாதவர் மற்றும் இளம் ஆண்குழந்தையை கவனித்து பராமரித்து வருகிறார் மற்றும் அவர் கடலூரில் அவருடைய பெற்றோருடன் வாழந்து வருகிறார். இது வழக்காக இருக்க, எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட விவாகரத்து வழக்கு எங்கு மனுதாரர் வசிக்கிறாரோ, அங்கு மாறுதல் செய்யப்பட வேண்டியது.

17. மாறுதல் மனுக்கள் சம்பந்தமான தத்துவங்கள், இன்னும் குறிப்பாக விவாக வழக்குகளில், மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தால் மூன்று வழக்குகளில் நன்கு தீர்வு செய்யப்பட்டுள்ளன; அவை கீழ்க்கண்ட வழக்குகளாவன;

(i) மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் அமர்வு நீதிபேராணை மேல்முறையீடு எண்.1181/2009, தேதி 09/07/2010, அதில் பத்திகள் 21 மற்றும் 22இல் கீழ்கண்டவாறு

குறிப்பிடப்பட்டுள்ளது.

"21. இதுபோன்ற வழக்குகளில் எதிர்நபர் குடியிருப்பாளரா அல்லது குடியுறிமைதாரரா என்பது முக்கியமல்ல, ஒரு சமயம் திருமணம் இந்துச் சட்டப்படி நடைபெற்றிருந்தால், விவாக உறவுகள் இந்து திருமணச்சட்டத்தின் வழிமுறைகின் படி ஆளுமையாகும். ஆகையால் பிரிவு 19 என்பதற்கு நோக்கத்தின் அடிப்படையில் விளக்கம் அளிக்கப்பட வேண்டும். மனைவி சம்பந்தப்பட்ட செயல்முறை துவங்கப்பட்டால், அது மனைவியின் வசிப்பிடமோ நீதிமன்ற ஆட்சி எல்லையாக இருக்கக் கூடியது.

22. இந்து திருமணச் சட்டம் பிரிவு 19(iii-a)ன் வழிமுறைகளை பரிசீலனை செய்கையில் அதன் குறிக்கோள்கள் மற்றும் காரணங்கள் எந்த அடிப்படையில் பாராளுமன்றம் அதுபோன்ற வழிமுறையை ஏற்படுத்த முன் வந்தது என்பதையும் குறிப்பாக எடுத்துக்கொள்ள வேண்டும். பிரிவு 19ல் உட்பிரிவு (iii-a) ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக நுழைக்கப்பட்டன. அனுபவம் என்பது சிறந்த ஆசிரியர். விவாகம் சம்பந்தமான செயல்முறைகள் துவங்கும்போது பெண்களுக்கு நேரும் கஷ்டங்களை அரசு உணர்ந்துள்ளது. சட்டக்குழுவும் அதே போல் பெண்களுக்கான தேசிய குழுவும் சமர்பித்த அறிக்கைகளில், அதுபோன்ற திருத்தம் செய்ய தேவைப்படும்படி, பெண்கள் அவர்களுடைய விவாக குறைபாடுகளுக்கு தீர்வு பெற அவர்களுக்கு அருகிலுள்ள நீதிமன்ற நீதி எல்லையை அணுக, ஏதுவாக, என்பதையும் அரசு ஒரு குறிப்பாக எடுத்துக்கொண்டது. ஆகையால், அதுபோன்ற ஒரு பயனுள்ள வழிவகை நம் நாட்டுப் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ளதை நீதிமன்றங்கள் பொருலுள்ள விளக்கமாக எடுத்துக்கொள்ள வேண்டும்."

சென்னை உயர்நீதிமன்றம் 30/08/2006 அன்று தீர்மானித்த மற்றொரு மாறுதல்

உரிமையியல் பல்வகை மனு எண்.138,139/2006ல் கீழ்காணும் மாண்புமிகு உச்சநீதிமன்ற தீர்ப்புகளை பரிசீலித்துள்ளது.

1. "(2000) 9 SCC 255ல் பிரசுரிக்கப்பட்ட மோனா அரேஷ் கோயல் எதிர் அரேஷ் சத்யா கோயல் என்ற வழக்கில் மனைவி பயணச் செலவுகளை ஏற்றுக்கொள்ளும் சூழ்நிலையில் இல்லையென வாதிடும் போதும் மற்றும் தனியாக பாம்பே பயணித்து தங்க இயலாது என்று வாதிட்டபோது மாண்புமிகு உச்சநீதிமன்றம் வழக்கினை மாறுதல் செய்ய உத்தரவிட்டுள்ளது.

2. (2000) 10 SCC 304ல் பிரசுரிக்கப்பட்ட கீதா ஹீரா எதிர் ஹரிஷ் சந்தர் ஹீரா என்ற வழக்கில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் மனுதாரரிடம் பணம் இல்லையென்று கூறியபோது அதனை பரிசீலித்துள்ளது.

3. (2000) 9 SCC 355ல் பிரசுரிக்கப்பட்ட லலிதா எ. ரங்கா எதிர் அஜய் சம்ப்லால் என்ற வழக்கில் மனைவி பாம்பேயில் கணவரால் விவாகரத்திற்காக தாக்கல் செய்யப்பட்ட வழக்கினை மாற்ற கோரி மனு தாக்கல் செய்தார். மனைவியின் வீடானது ராஸ்தானில் அமைந்துள்ள ஜெய்பூரில் அமைந்துள்ளது. அவ்வழக்கில் மனுதாரருக்கு ஒரு இளங்குழந்தை இருந்தது. எனவே, அவர் தன்னால் ஜெய்பூரிலிருந்து பாம்பேவிற்கு வழக்கு நடத்துவதற்காக அடிக்கடி சென்று வருவதிலுள்ள சிரமத்தினை கூறினார். எனவே, தூரம் மற்றும் மனைவியால் சந்திக்கக்கூடிய சிரமங்களை பரிசீலனை செய்து உச்சநீதிமன்றம் மாறுதல் செய்வதற்கான மனுவினை அனுமதித்தது.

4. (2005) 12 SCC 395ல் பிரசுரிக்கப்பட்ட அர்ச்சனா சிங் எதிர் சுரேந்திர பகதூர் சிங்

என்ற வழக்கில் மனைவி விவாகம் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளையும் எதிர்மனுதாரர் கணவரால் பைக்கந்த்பூரில் தாக்கல் செய்யப்பட்ட விவாகரத்திற்கான மனுவினையும் அலகாபாத்திற்கு மாறுதல் செய்ய வேண்டுமென தாக்கல் செய்தார். மனுதாரர் மனைவி அலகாபாத்தில் வசிப்பதாகவும், வெகுதூரம் பயணிப்பதில் சிரமம் உள்ளதாகவும், அதிலும் குறிப்பாக மனைவி தாக்கல் செய்த கு.வி.கு.ச பிரிவு 125ன் கீழான மனுவானது அலகாபாத்தில் அமைந்துள்ள குடும்ப நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதாகவும், எனவே அதனடிப்படையில் தாக்கல் செய்தார். மனைவி வெகுதூரம் பயணிப்பதால் ஏற்படும் சிரமங்களை மாண்புமிகு உச்ச நீதிமன்றம் பரிசீலனை செய்து, வழக்கு நடவடிக்கைகளை மாண்புமிகு உச்ச நீதிமன்றம் அலகாபாத்திற்கு மாறுதல் செய்து உத்தரவிட்டது.

(iii) சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை அமர்வு 03/03/2011 அன்று மாறுதல் உரிமையியல் பல்வகை மனு (MD) எண்.108/2010ல் பத்தி 18ல் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"18. இந்து திருமணச்சட்டம் பிரிவு 19 வழிவகை (iii-a)யை உள் நுழைத்து பிரிவு 19 திருத்தம் செய்யப்பட்டது என்பது உண்மை. அதன்படி திருத்தப்பட்ட பிரிவு (iii-a)ன் படியான சிறப்பு வழிவகைகளில் மனைவி ஒரு மனுவை தாக்கல் செய்ய அல்லது கணவரின் நீதிமன்ற நடவடிக்கைகளில் எதிர்கொள்ள அவர் வசிப்பிட பகுதியான நீதி எல்லையில் செய்யப்பட வேண்டும். பாராளுமன்றத்தின் நோக்கம் பெண்களின் உரிமைகளையும் அக்கறையையும் காப்பாற்ற வேண்டும். காரணம் அவர்கள் துன்புறுத்தலுக்கும் கொடுமைகளுக்கும் ஆளாகின்றனர். ஆனால் இந்து திருமணச்சட்டத்தின் இந்த சிறப்பு முன்னுரிமை பிரிவு 19 (iii-a)ன் கீழ் உறுதி செய்யப்பட்டுள்ளது. கணவரை பழிவாங்க உபயோகப்படுத்தக் கூடாது. மனைவி வசிப்பிடத்திற்குள் உள்ள நீதிமன்ற நீதிவரையை தேர்வு செய்ய ஒரு நியாயமான

காரணம் இருத்தல் வேண்டும்."

18. மனுதாரர் அவருக்குள்ள சுதந்திரப்படி தக்க பராமரிப்பு மனுவை, அவருக்கும் அவர் குழந்தைக்கும் பராமரிப்புத் தொகை கோரி தாக்கல் செய்யலாம் என்பதை சொல்ல தேவையில்லை. இறுதியான பராமரிப்புத் தொகை தக்க நீதிமன்றத்தில் வழக்கு நடைமுறை முடிந்தபின் நிர்ணயிக்கப்படும். எவ்வாறாயினும் இடைக்காலப் பராமரிப்புத் தொகை இளங்குழந்தையின் அடிப்படைத் தேவைகளுக்கும் பாதுகாப்பிற்கும் அவசியமானது மற்றும் அதில் எந்த தாமதமேற்பட்டாலும் அது இளங்குழந்தையின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும்.

19. தற்போதைய இ.உ.ப.ம யின் படி பார்க்கையில் மனுதாரர் வேலையில்லாதவர், இளங்குழந்தையைக் கவனிப்பவர், அவர் வயதான பெற்றோர்களைச் சார்ந்துள்ளார்.

20. பொருண்மைகள் அவ்வாறு இருக்க, இந்த நீதிமன்றம் கீழ்க்கண்ட உத்தரவுகளை பிறப்பிக்க முன் வருகிறது.

(1) மயிலாடுதுறை முதன்மை சார்பு நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள இ.தி.அ.ம..எண்.243/2022 அந்த நீதிமன்றத்தின் கோப்புகளில் இருந்து உடனடியாக கடலூர் குடும்ப நீதிமன்றம் கோப்புகளுக்கு மாறுதல் செய்யப்படுகிறது.

(2) மயிலாடுதுறை முதன்மை சார்பு நீதிமன்றம் இதன் வழக்குத்தாள்களை கடலூர் குடும்பநீதிமன்றத்திற்கு இந்த உத்தரவு நகல் கிடைத்த நான்கு வாரத்திற்குள் மாறுதல் செய்ய உத்தரவிடப்படுகிறது.

(3) இதன் எதிர்மனுதாரர் - கணவர் இடைக்கால பராமரிப்புத் தொகையாக ரூ.3,000/- (ரூபாய் மூவாயிரம் மட்டும்) மனுதாரருக்கு அவருடைய இளம் ஆண் குழந்தையை பராமரிக்க ஜனவரி 2023 முதல் வழங்க உத்தரவிடப்படுகிறது.

(4) இந்த இடைக்கால பராமரிப்புத் தொகை ரூ.3,000/- (ரூபாய் மூவாயிரம் மட்டும்) ஒவ்வொரு காலண்டர் மாதம் 10ம் நாள் அன்றோ முன்போ, மனுதாரர்-தாயார் வங்கிக்கணக்கிற்கு செலுத்தப்பட வேண்டும் மற்றும் மனுதாரருக்காக கற்றறிந்த வழக்கறிஞர் உறுதி கூறும்படி வங்கிக் கணக்கு எண் மற்றும் விவரங்களுடன் எதிர் மனுதாரரின் கற்றறிந்த வழக்கறிஞருக்கு வழங்கி இன்று முதல் ஒருவார காலத்திற்குள் எதிர்மனுதாரருக்கு தெரியப்படுத்த வேண்டும். இடைக்கால பராமரிப்புத் தொகையை வழங்கும் விதம் எதிர்மனுதாரர் மனுதாரர் வங்கிக் கணக்கிற்கு பண மாறுதல் மூலம் அனுப்பலாம் அல்லது மனுதாரர் பெயரில் வரைவு காசோலையாக அனுப்பலாம்.

(5) எதிர்மனுதாரர் தரப்பில் இளம் ஆண் குழந்தைக்கு இடைக்கால பராமரிப்புத் தொகை வழங்குவதில் ஏதாவது தவறுதல் ஏற்பட்டால் மனுதாரர் தக்க நீதிமன்ற அவமதிப்பு மனுவினை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய சுதந்திரம் வழங்கப்படுகிறது.

(6) இந்த மாறுதல் உரிமையியல் பல்வகை மனுவில் வழங்கப்பட்டுள்ள இடைக்கால பராமரிப்புத் தொகை உத்தரவு மனுதாரர் சட்டப்படி மேற்கொண்டு கோரும் பராமரிப்பிற்கு ஒரு தடையாக இருக்காது.

(7) இ.தி.அ.ம. NO.243/2022 எவ்வளவு விரைவாக தீர்மானிக்க இயலுமோ அவ்வளவு விரைவாக தீர்மானிக்கப்பட வேண்டும்.

21. மேற்கண்ட உத்தரவுகளின் படி இந்த மாறுதல் உரிமையியல் பல்வகை மனு அனுமதிக்கப்படுகிறது. எவ்வாறாயினும் செலவுத் தொகை பற்றிய உத்தரவு இல்லை. இதன் விளைவா சம்பந்தப்பட்ட பல்வகை மனுக்கள் முடிக்கப்படுகின்றன.

11.01.2023

பொறுப்புத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்கு உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும். "